# இலங்கையில் புதிய அரசியல் யாப்பு உருவாக்கத்திற்கான வாய்ப்புக்களும் சவால்களும்

**பவித்திரா, ர., திருச்செந்தூரன்.சி.**
*அரசறிவியற்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.*
pavithirap72@gmail.com

*பிரித்தானியர் ஆட்சியின் இறுதிப் பகுதியில் இலங்கையானது தென்னாசியா மற்றும் தென் கிழக்கு ஆசியாவில் அரசியல் ஸ்திரமான நாடாகக் காணப்பட்டது. 1948 இல் சுதந்திரம் அடைந்ததைத் தொடர்ந்து புதிய யாப்புருவாக்க செயல்முறைகள் தேசிய ஒருமைப்பாடு, இன நல்லிணக்கம்,ஜனநாயகம் என்றவற்றை கேள்விக்குட்படுத்துபவையாக அமைந்துள்ளன. குறிப்பாக 1978 ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு அரசியல் யாப்பானது இலங்கையில் அடிப்படை ஜனநாயக முறைகளை கேள்விக்கு உட்படுத்துகின்றது. இன்று இலங்கை எதிர்கொள்கின்ற இனப்பிரச்சினை, பொருளாதார நெருக்கடி என்பனவற்றிற்கு அடிப்படை காரணம் 1978 ஆம் ஆண்டு யாப்பினுடைய வலுவற்ற தன்மையாகும். பல்லினதன்மை யுடைய ஒரு நாட்டில் எத்தகைய விடயங்களை புறக்கணிக்க வேண்டுமோ அவ் விடயங்களை உள்வாங்கியே 1978 ஆம் ஆண்டு யாப்புருவாக்கம் இடம்பெற்றுள்ளது. இவ் யாப்பில் 21 சீர்திருத்தங்கள் இதுவரை ஏற்படுத்தப்பட்டுள்ளபோதும் திருத்தங்கள் நிரந்தரத் தன்மை உடையதாக காணப்படவில்லை. 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பானது நிறைவேற்று அதிகாரம் உள்ள ஜனாதிபதி முறை, பாராளுமன்ற அடிப்படை உரிமைகள், மக்கள் தீர்ப்பு, மொழி, மதம், தேர்தல் முறை உட்பட பல விடயங்களில் குறைபாடுகளைக் கொண்டு காணப்படுகின்றது. இதனால் இன மத முரண்பாடு, பொருளாதார பலவீனம், சமூக வேறுபாடு நிலவுகின்றது. இந்நிலையில் புதிய யாப்பு உருவாக்கத்திற்கான செயற்பாடுகள் அவசியமாகின்றது. என்பதை உணர்த்துகின்றது. அறிமுகப்படுத்தப்பட வேண்டிய அரசியல் யாப்பானது இரண்டாம் குடியரசு அரசியல் யாப்பில் காணப்படுகின்ற குறைபாடுகளை நிவர்த்திசெய்ய வேண்டியது தவிர்க்க முடியாததாகும். இத்தகையொரு அரசியல் யாப்பினை இலங்கைக்கு கொண்டு வருவதில் பல சவால்கள் காணப்படுகின்றது. இந்த சவால்களை கடந்து இலங்கைக்கு புதியதொரு அரசியல் யாப்பினை உருவாக்குவது அவசியமாகும்.*

**திறவுச்சொற்கள்:** ஜனநாயகம், இனமுரண்பாடு, பொருளாதார நெருக்கடி